Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Kallakurichi

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS) ~~(Under Section 154 Cr.P.C.)~~
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040829
Cr.NO. 03/2024

District : கள்ளக்குறிச்சி
மாவட்டம்

PS: ல.ஒ.த.பிரிவு
காவல்நிலையம்

Year: 2024
ஆண்டு

FIR No.:
மு.த.அ. எண்

Date: 09.08.2024
நாள்

(i) Act சட்டம்: PC ACT 1988 As Amended
Sections பிரிவுகள்: 7 of PC Act 2018

(ii) Act சட்டம்: in PC (Amendment) Act 2018
Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : 02.08.2024 நாள் முதல்
Date to : 08.08.2024 நாள் வரை

Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : 09.08.2024
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 07.30 Hrs
நேரம்

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time :
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
கணினி தட்டச்சு மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
சுமார் 15 கி.மீ வடமேற்கு

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
உதவி மின் பொறியாளர் அலுவலகம் வடக்கனந்தல்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : க.ரா.ஷியாம்பிரபாகர்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : க.ராஜேந்திரன்
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில்
(g) Address : முகவரி
எண் - 2/1, LF சாலை, அம்மாப்பேட்டை, வடக்கனந்தல் அஞ்சல், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. வெங்கடாசலம், வணிக ஆய்வாளர், உதவி மின் பொறியாளர் அலுவலகம், வடக்கனந்தல், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் .

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / . மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. [signature] 9/8/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 09082024

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

R. SATHIYARAJ

Name: பெயர் ..........
Rank: நிலை DSP..........V-A.C..........No. எண் ..........
KALLAKURICHI

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.08.2024 – 12.30 Hrs

Submitted: On 09.08.2024 at about 07.30 hrs, while I was in my office, one இரா.ஷியாம் பிரபாகர், வயது 35/2024, த/பெ இராஜேந்திரன், approached my detachment office and lodged a computer typed complaint which read as follows:- அனுப்புநர் இரா.ஷியாம் பிரபாகர், வயது 35/2024, த/பெ ராஜேந்திரன், எண்.2/1, L.F. சாலை, அம்மாபேட்டை, வடக்கனந்தல் அஞ்சல், கள்ளக்குறிச்சி மாவட்டம் பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், இலஞ்ச ஒழிப்பு துறை, கள்ளக்குறிச்சி ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். என் உடன் பிறந்தவர்கள் உதயகுமார், மணிமாறன் என நாங்கள் மொத்தம் மூன்று பேர், நான் B.E., M.B.A., வரை படித்துள்ளேன், தற்சமயம் எனது சொந்த நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு திருமணமாகி மீனா என்ற மனைவியும், வருண்கார்த்திக், ரோகித் விஷ்னு ஆகிய இரண்டு மகன்களும் உள்ளார்கள். எனது தாயார் கண்ணம்மாள் பெயரில் வடங்கனந்தல், அம்மாபேட்டை L.F. சாலை சர்வே எண். 108/28-ல் புதியதாக இரண்டு கடைகளுடன் கூடிய வீடு ஒன்று கட்டியுள்ளோம், அதற்கு மின்னினைப்பு பெற வேண்டி ஆவணங்களுடன் நான் கச்சிரபாளையம் உதவி மின்பொறியாளரை சந்தித்து கேட்டபோது, அவர் இது Group connections என்பதனால் நீங்கள் கள்ளக்குறிச்சி உதவி செயற்பொறியாளரை பார்க்கும்படி சொன்னார். அவர் கூறியதுபோல் நான் கள்ளக்குறிச்சி உதவி செயற்பொறியாளர் திரு.அருள்சாமி அவர்களை ஆவணங்களுடன் சென்று சந்தித்து நான் புதியதாக கட்டிய இரண்டு கடைகளுடன் கூடிய வீட்டிற்கு மின் இணைப்பு பற்றி கேட்டேன், அவர் எனது ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு என்னை இணைய வழியில் விண்ணப்பிக்குமாறு கூறினார். அவர் கூறியது போல், நான் கடந்த 23.07.2024-ந்தேதி மேற்படி வீட்டிற்கு மின்னிணைப்பு வேண்டி இணைய வழியில் விண்ணப்பம் செய்தேன், அதன் விண்ணப்ப எண். 20002G5530724432 ஆகும். பிறகு 25.07.2024 செயல்முறை கட்டணம் 2,030/-மும் செலுத்திவிட்டு, உதவி செயற்பொறியாளர் திரு.அருள்சாமி அவர்களை நான் சென்று பார்த்து இணைய வழியில் விண்ணப்பம் செய்த தகவலை சொன்னபோது, அதற்கு அவர் நான் பரிசீலனை செய்கிறேன் என்றும் நீங்கள் கச்சிராபாளையம் உதவி மின்பொறியாளர் அலுவலகம் சென்று பாருங்கள் என்று சொன்னார். அதன் பின்னர் கச்சிராபாளையம் AE அலுவலகம் சென்று அங்கு பணியிலிருந்த CI வெங்கடாசலத்திடம் இது வரை நடந்ததை சொல்லி கேட்டபோது அவர் அரசு கட்டணம் செலுத்திவிட்டு அதன் இரசீதை எடுத்து வந்து தன்னை பார்க்குமாறு சொன்னார். அதன் படி நானும் 02.08.2024 அன்று அரசு கட்டணம் ரூ.42,900/- செலுத்திவிட்டு விண்ணப்ப நகல் மற்றும் நான் செலுத்திய அரசு கட்டண இரசீது ஆகியவைகளுடன் அவரை சென்று பார்த்தேன். அப்போது அவர் உயர் அதிகாரி பணம் எதிர்பார்ப்பது போல தெரிகிறது என்று சொன்னார், அதற்கு நான் எவ்வளவு ஆகும் என்று கேட்டேன், அவர் நான் கேட்டு சொல்கிறேன் என்று கூறி என்னை அனுப்பிவிட்டார். பின்னர் 08.08.2024-ந்தேதியன்று மாலை சுமார் 04.07 மணிக்கு என்னை மேற்படி CI வெங்கடாசலம் தொடர்புகொண்டு ஆபிசுக்கு வரிங்களா பேசலாம் என்று சொன்னார், அதற்கு நான் சார் கொஞ்ச வேலையா வெளிய இருக்கேன் என்று சொன்னேன். அதற்கு அவர் எப்போது வீட்டு வருவீங்க

நான் அந்த பக்கம்தான் ஒரு வேலையா வரேன் என்று சொன்னார். சரி வாங்க சார், நான் வந்து பில்டிங்ல வெயிட் பண்றேன் என்று சொன்னேன், அவர் சொன்னதுபோல் அவர் சுமார் அரை மணிநேரம் கழித்து என்னை வந்து, நான் புதியதாக கட்டிய வீட்டின் உள்ளே வந்து பார்த்து மேலதிகாரியெல்லாம் கவனிக்க வேண்டி உள்ளது என்று சொல்லி ஒரு சர்வீசுக்கு ரூ.2,000/- வீதம் மொத்தம் ரூ.15,000/- கொடுக்குமாறு கேட்டார். அதற்கு நான் அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் முழுவதையும் கட்டிவிட்டேனே இது எதற்கு என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் இது எங்களுக்கான பணம் என்று சொன்னார், அப்போது நான் அவரிடம் சார் நான் விவசாயம் செய்து வருகிறேன், என்னால் அவ்வளவு பணம் புரட்ட முடியாது கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன், அதற்கு அவர் இதுவே கம்மிதாங்கா பார்த்து கொடுத்துடுங்க பெரிய பில்டிங்கா வேற இருக்கு என்று சொன்னார். நான் அவரிடம் சரிங்க சார் பணத்தை ரெடி செய்து கொண்டு வருகிறேன் என்று கூறி அவரை அனுப்பிவிட்டேன். நான் இது சம்மந்தமாக யோசித்து பார்த்து, எனக்கு இலஞ்சமாக எனது தாயார் பெயரில் கட்டும் வீட்டிற்கு மின்னிணைப்பு வாங்க விருப்பம் இல்லாததால் என்னிடம் பணம் இலஞ்சமாக கேட்கும் கச்சிராபாளையம் கமர்சியல் இன்ஸ்பெக்டர் வெங்கடாசலம் மீது இலஞ்ச ஒழிப்பு துறையிடம் புகார் கொடுக்கலாம் என முடிவு செய்து எனக்கு தெரிந்த நபர் மூலம் புகார் மனுவை தட்டச்சு செய்து இன்று 09.08.2024-ந்தேதி தங்களிடம் கொடுக்கிறேன். எனவே மேற்படி மின்னிமைப்பு கொடுப்பதற்கு ரூ.15,000/- இலஞ்சம் கேட்கும் கச்சிராபாளையம் CI வெங்கடாசலம் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள ஒப்பம் (இரா.ஷியாம் பிரபாகர்) நாள்: 09.08.2024 இடம்:கள்ளக்குறிச்சி.

Sir,

Received the above computer typed complaint on 09.08.2024 at about 07.30 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Kallakurichi Vigilance and Anti-Corruption in Cr.No.03/2024/AC/KLK u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended in the Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.00 hrs today on 09.08.2024 sd xxxxxx on 09.08.2024 (K.Sathiyaraj) Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Kallakurichi.

(K.Sathiyaraj)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi